# ஹங்குரங்கெத்த பிரதேச சபை
# நுவரேலியா மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 09 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜூலை 26 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஹங்குரங்கெத்த பிரதேச சபின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 84,981,908 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,066,820 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,356,211 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

022-0-001-3-5263226 இலக்கமுடைய வங்கிக் கணக்கின் 2006 முதல் 2009 வரையான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 395இ க்கமைய 2012 மார்ச் 16 அன்றும் தயாரிக்கப்படாதிருந்தது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டின் பொருட்டுத் தலைவர் சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 790 | 648 | 906 |
| (ii) | குத்தகை வாடகை | 1,089 | 917 | 591 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,050 | 1,050 | - |
| (iv) | பிற வருவாய் | 1,996 | 2,079 | 664 |

### 2.3.2 வருவாய் அறவீடு

(அ) ரிகில்லகஸ்கட நகரில் வாகனத் தரிப்பிடத்திற்கான இடத்தைப் பெயரிட்டு உப விதிகளை அமுல்படுத்துவதன் மூலம் வாகனத் தரிப்பிடக் கட்டணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

(ஆ) மத்துரட்ட உப அலுவலகங்களுக்குரிய தீர்வை அறவிடப்பட வேண்டிய வலயங்களில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய ‘‘கே’’ படிவம் 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் விநியோகிக்கப்படாதிருந்தன.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 209,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,210,862 |

### 2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

மெதரட்ட உள்ளூராட்சித் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுச் செயற்திட்டத்திற்கு மத்திய மாகாணசபையின் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து 2011 ஜுன் 20 மற்றும் ஆகஸ்ட் 8 ஆகிய திகதிகளில் வழங்கிய ரூபா 188,738 பெறுமதியான உபகரணங்கள் கணக்காய்வுத் தினமான 2012 மார்ச் 16 வரையும் எதற்கும் பயன்படுத்தப்படாது பயனற்றிருந்தன.

### 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள 2 விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2010 ஆம் ஆண்டில் மாகாண சபை அங்கத்தவர் உதவியின் கீழ் ரூபா 150,000 வழங்கப்பட்டது. காணித்தகராறு காரணமாக வேலை நடைபெறவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் மாகாண சபை அங்கத்தவர் உதவியின் கீழ் ரூபா 81,880 செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட 2 செடிகளை வெட்டும் இயந்திரங்களில் ஒன்று கணக்காய்வுத் தினமான 2011 செப்டம்பர் 30 ஆந் திகதிய கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ரிக்கில்லகஸ்கட நகரில் பொதுச் சந்தைக்கும் அஞ்சல் அலவலகத்திற்குமிடையே அமைந்துள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் வியாபார நிலையம் ஒன்றிற்கு அத்துமீறிய நிர்மாணவேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 59 ஆம் விதியின்படி மீளாய்வாண்டு ஆரம்பத்தில் வருவாய்ப் பரிசோதகரால் சபையின்

அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள தொழில் முயற்சிகள் பற்றிய கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

(உ) சபையில் 11 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவி உத்தியோகத்தர்கள் இருவர் இருக்கையில் மத்துரட்ட உப அலுவலகத்தில் சிற்றூழியர் ஒருவர் தலைமைப் பொறுப்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். சபையில் முகாமைத்துவ உதவியாளர் உத்தயோகத்தர்களுக்கான வெற்றிடம் இல்லாதபோதும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரது கடமைகள் 4 சிற்றூழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பின் பிரகாரம் ரூபா 40,689 பெறுமதியான நூலகப் புத்தகங்களினதும் பொருட்களினதும் குறைவு சம்பந்தமாக அதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து சபைக்கு ஏற்பட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) மத்திய மாகாண கமத்தொழில் அமைச்சின் நிதியேற்பாட்டில் 2010 ஆம் ஆண்டில் ரூபா 3,105,467 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருட்களைச் மீள சுழற்சிப்படுத்தும் நிலையத்தில் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களின் மூலம் கொம்போஸ்ட் உரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்த்தபோதும், கணக்காய்வுத் தினமானக 2012 மார்ச் 14 ஆந் திகதியன்றும் 10 கிலோகிராம் கொம்போஸ்ட் உரம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிப்படுத்தும் நிலையத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் சேகரிக்க முடியாதுபோன கழிவுப் பொருட்களை இடுவதற்கென அந் நிலையக் காணியில் 2011 ஒக்டோபரில் ரூபா 42,680 செலவு செய்து கழிவுப் பொருட்களுக்கான குழி ஒன்று தோண்டப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2012 மார்ச் 16 அன்றும் அக்கழிவுப் பொருட்களுக்கான குழி நிரம்பாதிருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலைய நடவடிக்கைகள் தொடர்பாக சபையின் சுற்றாடல் உத்தியோகத்தரின் நேரடியானதும் நிரந்தரமானதுமான மேற்பார்வை மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது.

(இ) சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களிலிருந்து கொம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்யப்பட்டுவதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 3,105,467 செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் பெறப்பட்ட

நிதியேற்பாட்டில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 3,029,766 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நிலையத்திற்கு நீர் வழங்குவதற்கு நீர் உருவாக்குமிடம் இன்மையால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற முடியாத நிலைமை நிலவியது.

(ஈ) ஹங்குரங்கெத்த பொதுக் கழிவுறையில் அசுத்தப்பொருட்கள் வெளிச்சூழலில் கலப்பது காரணமாக ஹங்குரங்கெத்த பொலிஸார் பிரதேச சபைக்கு எதிராகத் தொடுத்த வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் பிரதேச சபை கண்டி மஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு ரூபா 45,000 தண்டப் பணமாகச் செலுத்தயிருந்தது.

## 2.7 செயற்திறன்

---------------------

பிரதேச சபை செயல் திட்டத்தைத் தயாரிக்காமையால் வருடாந்த செயல் திட்டத்திற்குகிணங்க நடக்காமை, நிதி மற்றும் பௌதீக செயற்திறன் என்பவற்றிலுள்ள வேறுபாடுகளுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, இலக்கிடப்பட்ட நோக்கத்தை எய்தாமை என்பன தொடர்பாக செயற்திறன் பகுப்பாய்வை மேற்கொள்ள முடியவில்லை.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

மத்திய மாகாண சபை நிதி வேற்பாட்டின் மீது 2011 ஆம் ஆண்டில் ரூபா 449,757 செலவு செய்து வேகம எனுமிடத்தில் நிர்மாணித்த கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையம் 2012 மார்ச் 14 ஆந் திகதியன்று பரிசீலிக்கப்பட்டபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கூரைத் தகடுகளுக்கு நிகராக மேற்தகடுகள் பொருத்தப்படவில்லை.

(ii) வடிம்புப் பலகை சிதைந்து போயிருந்ததுடன் அது வெடித்துமிருந்தது.

(iii) வடிம்புப் பலகை குறிப்பிட்டவாறு பறாளையில் பொருத்தப்படாதிருந்தது.

(iv) கூரையின் தகடு பொருத்தப்படுவதற்காக இரும்பு ஆணிகள் பயன்படுத்தப்படுவதால் கூரைத் தகடுகள் பழுதடைந்திருந்தன.

(v) கூரையின் கீழ்ப்பகுதிப் பலகை சரிந்திருந்ததுடன் அதனைத் தாங்கி நிற்கும் வண்ணம் எதுவும் பொருத்தப்படவில்லை.

(vi) கூரையின் கீழே முதுன் பலகை பொருத்தப்படவில்லை.

(vii) கட்டிடச் சுவர் மற்றும் சீமெந்து நிலத்தின் வேலைகள் திருப்திகரமாக நிறைவேறவில்லை. அத்துடன் சீமெந்து நிலம் நீர்ப்பற்றுடையதாகவும் காணப்பட்டது.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------------

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.